மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# தொல்காப்பியம் காதல்கோட்பாடு உளவியல் அடிப்படையில் சில அவதானிப்புகள்

கா.பாபு
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழத்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்

தமிழ்ச்சமூகத்தின் மன உணர்வுகளையும், வாழ்வியல் கூறுகளையும் உள்ளடக்கிய கலைக்களஞ்சியம் தொல்காப்பியம். மொழி தழைக்கவும், செழிக்கவும் இலக்கணம் இன்றியமையாதது. தொல்காப்பியம் தமிழ்ச்சமூகத்தின் பழமையான இலக்கணமாக இருந்தபோதிலும் அதில் புதிய சிந்தனைகளையும், கருத்தியலையும், உத்திகளையும் காண்பதற்கு இடமுண்டு. அறிவியல் துறைகளில் ஒன்றான உளவியல் சார்ந்த கருத்துகளும் கோட்பாடுகளும் தொல்காப்பியர்கூறும் காதற் கோட்பாடுகளோடு குறிப்பாக களவுக்கோட்பாட்டோடு பொருத்தி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**உளவியல்**

உளவியல் என்பது மனிதனின் மனப்போக்கை மனத்தின் செயல்பாடுகளை ஆராய்வதாகும். இது உள்ளம் அல்லது மனத்தின் செயல்பாடுகளை விளக்கும் மனநல அறிவியலாகும். மனிதனின் அகவுணர்வுகளையும் அவற்றின் வெளிப்பாடுகளையும் பிரதிப்பலிப்பது உளவியல். இத்துறை இலக்கியத்தோடு நெருங்கியத்தொடர்புடையது. இவற்றின் கோட்பாடுகளையும் கருத்தியலையும் இலக்கண இலக்கியங்களில் பொருத்திப்பார்க்க வேண்டியது காலத்தின் தேவையாகிறது.

**தொல்காப்பியம் காதற்கோட்பாடு**

பண்டைத்தமிழரின் காதல் கோட்பாடுகளைத் தொல்காப்பியர் களவியலில் சிறப்பாக எடுத்துரைக்கிறார். களவு என்பதற்கு மறை, காமக்கூட்டம் என்றெல்லாம் பொருள்கொள்ளப்படுகிறது. தலைவனும் தலைவியும் தமக்குள் தாமே நுகரும் உணர்வைப் பிறருக்குத் தெரியாமல் மறைக்க முயல்கின்றனர். இது மறைந்து செய்யும் களவு என்பர் நச்சினார்க்கினியர். இவ்வாறு மறைமுகமாக நிகழ்த்தப்பட்டாலும் இக்காதலைத் தொடர்ந்து நிகழ்த்திச் செல்வதற்கு மனநிகழ்வு, மெய்நிகழ்வு, கூற்று நிகழ்வு, செயல்நிகழ்வு முதலியவைகளே அடிப்படையாக அமைகின்றன என்கிறார் தொல்காப்பியர்.

"பேராச்சிறப்பின் இருநான்கு கிளவியும்"

"பதின்மூன்று கிளவியொடு"

"அவ்விணைக்கு இயல்பே"

"உணர்ச்சி ஏழினும்"

இதே கருத்தைத்தான் பஸ் (Buss) உளவியல் அறிஞரும் பதிவு செய்கிறார். மனிதனின் மனம், மெய், செயல்பாடு ஆகியவற்றை உற்றுநோக்கி ஆழ்மனதில் படிந்திருக்கும் அழுக்கப்பட்ட உணர்வுகளை ஆராய்வது உளவியல் என்ற கருத்து குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியத்தில் காணப்பெறும் மனவியல், உணர்வியல் சார்ந்த திணைக்கருத்துகள் வடமொழி உள்ளிட்ட உலகமொழிகளில் பெறப்படாதவை என்பர் சிவஞானமுனிவர். தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிற உளவியல் கோட்பாடுகளின் முழுப்பரிமாணத்தையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஒருங்கே பேசியவர் தொல்காப்பியர். தொல்காப்பியம் உள்ளிட்ட தமிழ் நூற்றொகைகள் பெரும்பான்மையும் மனம், உணர்வுசார்ந்த செய்திகளை மிகுத்துப் பேசுவதால் இவ்விலக்கியங்கள் உளவியலோடு நெருங்கியத் தொடர்பு கொண்டுள்ளன.

**உளவியல் கோட்பாடு**

இலக்கியத்தோடு தொடர்புடைய உளவியல் அணுகுமுறைகள்:

1. படைப்பு வெளியீட்டில் படைப்பாளன் மேற்கொள்ளும் உளவியல்.
2. படைப்பில் வரும் பாத்திரங்களின் உளவியல்.
3. படைப்பாளிப் பற்றிய உளவியல்

இவற்றுள் முதலாவதாக கூறப்படுகின்ற படைப்பு வெளியீட்டில் படைப்பாளன் மேற்கொள்ளும் உளவியல் என்ற கோட்பாட்டைத் தொல்காப்பியர் களவியல் கூறும் காதற்கோட்பாட்டுடன் பொருத்தினால் உண்மை விளங்கும். இக்கோட்பாட்டின்படி படைப்பாளன் படைப்பைப் படைக்கிறபோது அக்கால இலக்கிய மரபு, இலக்கிய புதுமை ஆகியவை பற்றிய அறிவு அடிப்படையாகவே அமைந்துவிடுகிறது. படைப்பாளியின் சமுதாய கொள்கைகளை அவன் தோன்றிய சமுதாயமே வகுத்தளிக்கிறது. சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த வினாக்களுக்கும் அவன் மறுமொழியளிக்கிறான். தொல்காப்பியமும் அவ்வாறே அமைந்துள்ளது.

**அகத்திணை உளவியல்**

அகத்திணைக் கருத்தை மொழிவதற்குக் கடைப்பிடிக்கப்பெறும் நனி நாகரிகமே அகமாந்தரின் உளவியல் போக்கை உணர்த்துகிறது. காதலர் பெயர்கள் இலக்கியப்படைப்பில் இடம் பெறல் இல்லை என்பது தொல்காப்பியரின் கூற்றாகும். "அவன்" "அவள்" என்ற படர்க்கைச் சுட்டுப்பெயர்கள் காதலர்களைக் கூறவே தோன்றின போலும். இவ்வாறு பொதுச்சுட்டுகள் இருப்பினும் காதலர் சார்ந்த நிலத்தின் பெயரால் தொழிலின் பெயரால் சுட்டுவது அகத்திணையியலில் வேண்டுமாறு அமைந்துள்ளது.

"பெயரும் வினையுமென்று ஆயிரு வகையே
திணைதொறுஉம் மரீஇய இணை நிலைப்பெயரே"

என்று கூறுவதால் அந்நிலத்தவராக இருந்ததைக் குறித்தவாராயிற்று. இவன் எந்நிலத்தவன் எந்நிலத்தவள் என்று அறிந்துகொண்டு காதல் பூப்பதில்லை. குலமும், குடியும், நிலமும் அறிந்தபின்னர் இயற்கைப்புணர்ச்சி தோன்றுவதில்லை. காதல் உலகப் பொதுமையுடையது.

"யாயும் யாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்"

என்றெல்லாம் அறிந்தபின்னர் இனிக்காதல் கொள்ளலாம் என்ற நிலையினைக் காதலர் மேற்கொள்வதில்லை. கண்ணிமைக்கும் பொழுதில் முன்கண்டறியாத இருவர் காதல் வயப்படுகிறார்கள் இதற்குக் காரணம் யாதாகும்?

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலதானையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே"

என்று கூறும் தொல்காப்பியர் இதனைப் பாலதாணை என்கிறார். இறையனார் களவியற் உரையும் காதற்கு முதற்காரணம் பாலதாணைதான் என்கிறது. இதற்குத் துணைமைக்காரணம் ஒன்று உண்டு. அதுவே காதலர் ஒருவரையொருவர் சந்தித்த காட்சி. அவ்வாறு அவர்கள் நோக்கும் காலத்து அவர்தம் உள்ளம் இரண்டும் எவ்வாறு ஒன்றின? இதனைத் தொல்காப்பியர் உளவியல் நோக்கில் எண்ணியுள்ளார். உள்ளம் ஒன்ற ஊழ்க்காரணம் என்பது மரபுவழிக் கருத்து. ஆனால் இதற்கு இருவர்தம் சந்திப்பு வழிசெய்தது என்பது நடப்பியல் செய்தி. தொல்காப்பியர் எவ்வாறு இருவர் உள்ளமும் ஒன்றின என்பதற்கு,

"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை யாகும்"

என்கிறார். நாட்டம் இரண்டும் என்பதற்கு தலைமகன் கண்ணும் தலைமகள் கண்ணும் என இளம்பூரணர் கூறுவர். ஆனால் நோக்கம் இரண்டனும் என்று நச்சினார்க்கினியர் கூறுவது இங்குச் சாலப்பொருந்தும் இது பார்வையன்று நோக்கு.

எப்பொழுது காதல் அரும்புகிறது என்று கவிஞர்கள் சொல்ல விழைகிறார்களோ அங்கெல்லாம் "நோக்கு" என்ற சொல்லையே பயன்படுத்துவது எண்ணத்தக்கதாகும். கண்வாயிலாக அறிவு உடம்பட்டன என்பது தொல்காப்பியர் கருத்தாகும். இது மனத்தின் அறிவு.

"ஆறறிவதுவே அவற்றோடு மன்னே"

என்ற தொல்காப்பியர் கூற்று இதனை தெளிவுப்படுத்தும். இக்காதல் எவ்வாறு சில நொடிகளில் கண்ணில் தோன்றி ஒருங்கு கூடிற்று என்பதற்கு அறிஞர் பிளேட்டோ இறைவன் சாபத்தால் பிரிந்த இரு உயிர்கள் அக்காலத்திலிருந்து சேரமுயன்று இன்று சேர்ந்தன. இதுவே காதல் என்றார். இதனை ஒத்தக் கருத்து குறுந்தொகையில் உண்டு. இவையெல்லாம் அறிவியல் நோக்கன்று. தொல்காப்பியர் பாலியல் அறிஞன் ஆதலால் கீழ்க்கண்டவாறு உரைக்கிறார்.

"குறிப்பே குறித்தது கொள்ளுமாயின்
ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்"

தலைவன் குறிப்பும் தலைவிக் குறிப்பும் ஒன்றாக இணையுமாயின் காதல் மெய்ப்பாடுகள் நிகழும் என்பது இதன் பொருள். காதலில் தன் குறிப்பை வெளிப்படுத்துவதற்கும் பிறர் குறிப்பைப் பொறுவதற்கும் அறிவு வேண்டும். அதனையே தொல்காப்பியர் நாட்டம் இரண்டும் அறிவுடம்படுத்தி கூட்டியுரைக்கும் குறிப்பு என்கிறார்.

மின்னலைப் போன்ற விழி வீச்சொன்றில் காதல் தோன்றுகிறது. இதுகுறித்து உளநூல் அறிஞர்கள் கூறுவது இங்கு எண்ணத்தக்கது. பஸ் என்ற உளநூல் அறிஞர் நெடிப்பொழுதில் தோன்றும் காதல் உயிரின் பரிணாம வளர்ச்சியோடு தொடர்புடையது. உயிரினங்கள் காலந்தோறும் இனப்பெருக்கத்தில் எய்தும் வெற்றிக்கு இரு அடிப்படைக் காரணங்கள் உண்டு என்கிறார். அவை:

1. ஆண், பெண் இருபாலரிடையே உண்டாகும் பாலுணர்வு.
2. குடும்ப அமைப்பில் ஈடுபட்டுச் சமுதாய வழிமுறைகளைப் பின்பற்றி அவற்றைப் பேணுவதில் உள்ள ஆர்வம் என்று கூறுகிறார்.

தொல்காப்பியர் கருத்துக்களோடு உளவியல் அறிஞரான பஸ், பிளேட்டோ போன்றவர்களின் கருத்துக்களை ஒப்பிடும்போது ஆண், பெண் இருவருக்கு ள்ளும் நேருகின்ற காதல் பாலுணர்வாலும் பருவமுருதலாலும், உள்ளவேட்கையாலும் சேர விழைவது மட்டும் காதலன்று. பருவமதற்பு, உள்ளவேட்கை பாரம்பரிய பண்பாட்டின் தொடர்ச்சி, குடும்ப அமைப்பில் உள்ள ஈர்ப்பு ஆகியவை இணைந்தே காதல் உருவாகிறது என்பதை மேற்கண்ட கருத்தாடல்களைக் கொண்டு இக்கட்டுரை பதிவுசெய்கிறது.

**சான்றெண் விளக்கம்**

◊ தொ.செய்யுளியில், நச்சினார்கிணியம், நூ. 1.
◊ தொ.பொருளதிகாரம், இளம்பூரணம் உரை.
◊ தொ.பொருளதிகாரம், இளம்பூரணம் உரை.

- தொ.பொருளதிகாரம், இளம்பூரணம் உரை.
- தொ.பொருளதிகாரம், இளம்பூரணம் உரை.
- Phsychology Robert A. Baron. P. 65.
- The Origin of Species Charles Darwin, P. 76.
- தொ.அகத்திணையில், இளம்பூரணம் உரை, நூ. 22.
- குறுந்தொகை, வேங்கடசாமி நாட்டார் உரை.
- தொ.களவியல், இளம்பூரணம் உரை, நூ. 2.
- தொ.களவியல், இளம்பூரணம் உரை, நூ. 5.
- தொ.மரபியல் இளம்பூரணம் உரை, நூ. 26.
- தொ.களவியல், இளம்பூரணம் உரை, நூ. 6.
- Introduction of Phsycology Norman L. Munn, p. 209.